## 1. வடமொழிச்சொற்கள்

பாடம் - 2

1. நாளை ரதோத்ஸவம் ஆதலால் ஸகல காரியாலயங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்படுகிறது.
   **விடை : நாளை தேரோட்டம் ஆதலால் எல்லாச் செயலகங்களுக்கும் விடுமுறை அறிவிக்கப்படுகிறது.**
2. நாளை திருவோண நஷத்திரம் கூடிய சுபதினத்தில் விவாஹ சுப முகூர்த்தம்
   **விடை : நாளை திருவோண விண்மீன் கூடிய நன்னாளில் திருமண விழா**
3. தாங்கள் பந்து மித்திரர்களுடன் வந்திருந்து வது-வரர்களை ஆசிர்வதிக்க வேண்டுகிறோம்.
   **விடை : தங்கள் உறவினர் நண்பர்களுடன் வந்திருந்து மணமகளையும் மணமகனையும் வாழ்த்த வேண்டுகிறோம்.**
4. நீதான் என் அத்யந்த ஸ்னேகிதன் என்று கூறிச் சந்தோஷித்தான்.
   **விடை : நீதான் என் நெருங்கிய நண்பன் என்று கூறி மகிழ்ந்தான்.**

பாடம்-7

1. அமிர்தம் போல் வர்ஷித்த மழை கண்டு ஜனங்கள் சந்தோஷம் அடைந்தார்கள்.
   **விடை : அமிழ்தம் போல் பொழிந்த மழை கண்டு மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.**
2. மகான்களுடைய ஆசிர்வாதத்தால் ஷேமமாயிருப்பாய்!
   **விடை : ஞானிகளின் வாழ்த்துதலால் வளமுடன் வாழ்வீர்கள்!**
3. பாலிய விவாஹம் சர்க்காரால் தடை செய்யப்பட்டுவிட்டது.
   **விடை : குழந்தைத் திருமணம் அரசால் தடைசெய்யப்பட்டு விட்டது.**
4. உனது விஞ்ஞாபனம் எனக்கு ஸம்மதமில்லை.
   **விடை : உனது விளக்கம் எனக்கு உடன்பாடில்லை.**
5. கும்பாபிஷேக வைபவம் பூர்த்தியாயிற்று.
   **விடை : குடமுழுக்கு விழா நிறைவுற்றது.**

**கூடுதல் வினாக்கள்**

| | | |
|---|---|---|
| அபிஷேகம் - **நீராட்டு** | கஜானா - **கருவூலம்** | அவஸ்தை - **துன்பம்** |
| ஆஸ்தி - **சொத்து** | இஷ்டம் - **விருப்பம்** | இலட்சுமி - **திருமகள்** |
| சரஸ்வதி - **கலைமகள்** | ஜமக்காளம் - **விரிப்பு** | பஜனை - **கூட்டு வழிபாடு** |
| ஜில்லா - **மாவட்டம்** | பஜார் - **கடைவீதி** | ஜாஸ்தி - **அதிகம்** |
| சாஸ்திரம் - **கலை** | ஜனங்கள் -**மக்கள்** | ஜனநாயகம் - **குடியாட்சி** |
| ஜனாதிபதி - **குடியரசுத்தலைவர்** | | |

## 2. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்

பாடம்-1

1. நிலவை பிடித்து சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்
   **விடை : நிலவைப் பிடித்துச் சில கறைகள் துடைத்து குறுமுறுவல் பதித்த முகம்**
2. கொல்லை கிணற்றிலே வெண்ணிலா பந்து
   **விடை : கொல்லைக் கிணற்றிலே வெண்ணிலாப் பந்து**
3. எள்ளு செடியிலே வெள்ளை பூ பூத்தது
   **விடை : எள்ளுச் செடியிலே வெள்ளைப் பூ பூத்தது**
4. பெட்டி கடையிலே வெற்றிலைக்கு சுண்ணாம்பு கேட்டு வா
   **விடை : பெட்டிக் கடையிலே வெற்றிலைக்குச் சுண்ணாம்பு கேட்டு வா**
5. மரகடை பக்கம் போகாதே இழைபுளி தூசி ஒவ்வாது
   **விடை : மரக்கடை பக்கம் போகாதே இழைப்புளி தூசி ஒவ்வாது.**

பாடம்-2

பயிற்சி:1

1. ஔவையேச் சுட்டப்பழம் வேண்டுமா? சுடாதப்பழம் வேண்டுமா? என்றுக் கேட்டான் முருகப்பெருமான்
   **விடை : ஔவையே சுட்ட பழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என்று கேட்டான் முருக பெருமான்**
2. ஊறுக்காய் வைத்தால் பழையசோறு உள்ளே போகாதா?
   **விடை : ஊறுகாய் வைத்தால் பழையச்சோறு உள்ளேப் போகாதா?**
3. படிக்காதப் பெண்ணினால் தீமை! என்ன பயன் விளைப்பான் அந்த ஆமை.
   **விடை : படிக்காத பெண்ணினால் தீமை! என்னப் பயன் விளைப்பான் அந்த ஆமை.**
4. இரவுப்பகல் பாராதுப் படித்தும் தேர்ச்சிப் பெறவில்லையே
   **விடை : இரவுபகல் பாராது படித்தும் தேர்ச்சி பெறவில்லையே**
5. சென்னைச் சென்றுத் திரும்ப எவ்வளவுச் செலவாகும்?
   **விடை : சென்னை சென்று திரும்ப எவ்வளவு செலவாகும்?**

பயிற்சி - 2

1. கண்ணாக் கண்ணா இங்கே வந்துப் பார் என்று அழைத்தாள் செல்வி
   **விடை : கண்ணா கண்ணா இங்கே வந்து பார் என்று அழைத்தாள் செல்வி**
2. படிக்கும்படி சொன்னால் கண்டுக் கொள்ளாமல் இருப்பதா?
   **விடை : படிக்கும்படிச் சொன்னால் கண்டு கொள்ளாமல் இருப்பதா?**
3. முடிக்கெழு வேந்தர் மூவருக்கும் உரியது. நீவிரேப்பாடியருளுக என்று வேண்டிக் கொண்டார் சாத்தனார்.
   **விடை : முடிகெழு வேந்தர் மூவருக்கும் உரியது. நீவிரேபாடியருளுக என்று வேண்டிக் கொண்டார் சாத்தனார்.**
4. அழுத்தக் கண்ணும் விரித்தக் குழலும் புழுதிப் படிந்த உடலுமாகக் கண்ணகி நீதிக் கேட்டாள்.
   **விடை : அழுத கண்ணும் விரித்த குழலும் புழுதி படிந்த உடலுமாகக் கண்ணகி நீதிக் கேட்டாள்.**
5. இராமனது சேவையில் அமர்ப்புரிந்து இறக்கவும் ஒருப்படாதத் தனதுக் குறையை நினைந்து சுக்கிரீவன் வருந்தினான்.
   **விடை : இராமனது சேவையில் அமர் புரிந்து இறக்கவும் ஒருப்படாத தனது குறையை நினைந்து சுக்கிரீவன் வருந்தினான்.**
6. பலப்பலவென்றுப் பொழுது விடிந்தது.
   **விடை : பலபலவென்று பொழுது விடிந்தது**

பாடம்-4

1. போட்டி தேர்வுகளுக்கு நன்குப் படித்து சிறப்பாக எழுதினால் உடனே பதவி உயர்வுக் கிடைக்கும்.
   **விடை : போட்டித் தேர்வுகளுக்கு நன்குப் படித்துச் சிறப்பாக எழுதினால் உடனே பதவி உயர்வு** கிடைக்கும்.
2. கண்ணகி தெய்வத்திற்கு கயவாகு மன்னன் பத்தினி கோட்டம் எடுத்து சிறப்பித்தான்.
   **விடை : கண்ணகி தெய்வத்திற்குக் கயவாகு மன்னன் பத்தினிக் கோட்டம் எடுத்துச் சிறப்பித்தான்.**

## 3. ஆங்கிலச் சொல்லை நீக்கி இனிய தமிழில் எழுதுதல்

பாடம்-2

1. ஸ்கூல் விட்டதும் டீச்சர் லைனில் போகச் சொன்னார்கள்.
   **விடை : பள்ளிக்கூடம் விட்டதும் ஆசிரியர் வரிசையாய் போகச் சொன்னார்கள்.**
2. முதல் அட்டெம்ட் பாஸ் என்றால் சக்ஸஸ் தான்.
   **விடை : முதல் முயற்சி தேர்ச்சி என்றால் வெற்றி தான்.**
3. இந்த பொக்கே கொடுத்து ரிசீவ் பண்ணி வா
   **விடை : இந்த மலர்ச்செண்டை கொடுத்து வரவேற்று வா**
4. டாக்டரின் அட்வைஸ்படி காரம் சேர்க்கக்கூடாது.
   **விடை : மருத்துவரின் அறிவுரைப்படி காரம் சேர்க்கக் கூடாது.**
5. ரெயின் வாட்டர் ஹார்வெஸ்ட் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.
   **விடை : மழைநீர் சேமிப்பைப் பற்றி எல்லார்க்கும் சொல்வோம்.**

பாடம்-8

1. ரோடு ரூல்ஸ் ஃபாலோ பண்ணனும்.
   **விடை : சாலை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.**
2. ப்யூர் டமில்ல பேசணும்னு நான் டிரை பண்றேன்.
   **விடை : தூய தமிழில் பேச வேண்டும் என முயற்சி செய்கின்றேன்.**
3. எங்க பேமலி சுமால் பேமலி.
   **விடை : எங்களுடைய குடும்பம் சிறிய குடும்பம்**
4. மார்னிங் பிரஷ் பண்ணிட்டு வாக்கிங் போவேன்.
   **விடை : அதிகாலையில் பல்துலக்கிவிட்டு நடைப்பயிற்சி செய்வேன்.**
5. ஸ்விம்மிங் ஒரு ஹெல்த்தி எக்ஸர்சைஸ்.
   **விடை : நீச்சல் ஒரு ஆரோக்கியமான உடற்பயிற்சி**

## 4. எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுதல்

பாடம்-1

1. பேருந்து நிருத்துமிடத்தில் பல்லிக்கூடம் இருக்கிறது.
   **விடை : பேருந்து நிறுத்துமிடத்தில் பள்ளிக்கூடம் இருக்கிறது.**
2. இன்றும் நம் நாட்டில் பெறுவாரியான மக்கல் உள்ளார்கலே
   **விடை : இன்றும் நம் நாட்டில் பெருவாரியான மக்கள் உள்ளார்களே**
3. ஏறிகளில் மலைநீர் சேமித்தாள் கிணருகளில் நீர் வற்றாது.
   **விடை : ஏரிகளில் மழைநீர் சேமித்தால் கிணறுகளில் நீர் வற்றாது.**

4. ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது.
   **விடை : ஆலமரத்தின் விழுதினைப் பாம்பென்று குரங்கு அஞ்சியது.**
5. கொஞ்சம் வென்னி வைத்துத் தந்தால் என்னை தேய்த்துக் கொல்வேன்.
   **விடை : கொஞ்சம் வெந்நீர் வைத்துத் தந்தால் எண்ணெய் தேய்த்துக் கொள்வேன்.**

## 5. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுதல்

பாடம்-3

1. தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.
   **விடை : தென்னை ஓலையால் கீற்றுப் பின்னுவார்கள்.**
2. அம்பு வீசி மான்குட்டியைக் காயப்படுத்தினாள்.
   **விடை : அம்பு எய்து மான்கன்றைக் காயப்படுத்தினாள்.**
3. தோட்டத்தில் உள்ள வாழைச்செடி பார்க்க அழகாக உள்ளது.
   **விடை : தோட்டத்தில் உள்ள வாழைக்கன்று பார்க்க அழகாக உள்ளது.**
4. பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.
   **விடை : பனந்தோப்பில் ஆந்தை அலறுவது கேள்.**
5. கஞ்சி சாப்பிட்டால் காய்ச்சலுக்கு நல்லது.
   **விடை : கஞ்சி குடித்தால் காய்ச்சலுக்கு நல்லது.**

**கூடுதல் வினாக்கள்**

**1. இளமைப்பெயர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆடு | - ஆட்டுக்குட்டி | மான் | - மான்கன்று | கீரி | - கீரிப்பிள்ளை |
| சிங்கம் | - சிங்கக்குருளை | கோழி | - கோழிக்குஞ்சு | புலி | - புலிப்பறழ் |

**2. ஒலி மரபு (பறவைகள்)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆந்தை | - அலறும் | கிளி | - பேசும், கொஞ்சும் | மயில் | - அகவும் |
| குயில் | - கூவும் | காக்கை | - கரையும் | கூகை | - குழறும் |
| கோழி | - கொக்கரிக்கும் | சேவல் | - கூவும் | புறா | - குனுகும் |

**3. ஒலி மரபு (விலங்குகள்)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பசு | - கத்தும் | ஆடு | - கத்தும் | சிங்கம் | - முழங்கும் | புலி, பன்றி | - உறுமும் |
| நரி | - ஊளையிடும் | நாய் | - குரைக்கும் | யானை | - பிளிறும் | குதிரை | - கனைக்கும் |
| பூனை | - சீறும் | வண்டு | - முரலும் | எலி | - கீச்சிடும் | எருது | - எக்காளமிடும் |
| குரங்கு | - அலப்பும் | | | | | | |

**4. தொகுப்பு பெயர்கள்**

வாழைத்தோட்டம்
தென்னந்தோப்பு
சோளக்கொல்லை
ஆட்டுமந்தை
எறும்புச்சாரை

**5. வாழிடம்**

| | |
|---|---|
| மாட்டுத்தொழுவம் | ஆட்டுப்பட்டி |
| குதிரைலாயம் | சிங்கக்குகை |
| எறும்புப் புற்று | பாம்புப்புற்று |
| எலி வளை | நண்டு வளை |
| மாந்தோப்பு | ஆநிரை, பறவைக்கூட்டம் |

**6. வினை மரபு**

| | | |
|---|---|---|
| பூ பறித்தான் | மரம் வெட்டினான் | கதிர் கொய்தான் |
| ஓவியம் புனைந்தான் | சோறு உண்டான் | பால் பருகினான் |
| ஆடை நெய்தான் | வண்ணம் தீட்டினான் | பாட்டு பாடினான் |
| செய்யுள் இயற்றினான் | திருநீறு அணிந்தான் | நூல் நூற்றான் |
| கூடை முடைந்தான். | குழல் ஊதினான் | நாற்று நட்டான் |
| அம்பு எய்தான் | பறை அறைந்தான் | களை பறித்தான் |
| உமி கருக்கினான் | வீணை மீட்டினான் | அப்பம் தின்றான் |
| தாம்பூலம் தரித்தான் | கயிறு திரித்தான் | சிலை வடித்தான் |
| சுவர் எழுப்பினான் | மாத்திரை விழுங்கினான் | வேல் எறிந்தான் |

7. சினைப்பெயர்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவிலை | கரும்புத்தோகை | தென்னங்கீற்று | சோளத்தட்டை | மான் கொம்பு | மயில்தோகை |
| வேப்பந்தழை | பனையோலை | யானைத்தந்தம் | மூங்கில்இலை | வாழையிலை | கோழி இறகு |

## 6. பொருள் வேறுபாடறிதல்

பாடம்-3

1. ல-ள-ழ வேறுபாடு

அலகு - பறவையின் மூக்கு (கிளியின் அலகு உறுதியாய் இருக்கும்)
அளகு - பெண்மயில் (அளகு ஆண்மயிலுடன் வந்தது)
அழகு - கவின், வனப்பு, எழில் (இயற்கை அழகு கண்ணுக்கு விருந்து)
அலை - கடல் அலை (கடல் அலை கரையில் மோதியது)
அளை - புற்று (எந்த அளையில் எந்தப் பாம்போ)
அழை - கூப்பிடு (அவனை அழைத்து வா)
இலை - மரம், செடி, கொடிகளின் இலை (வாழை இலையில் உணவு பரிமாறலாம்)
இளை - (உடல்) இளைத்தல் (திடீரென உடல் இளைத்தான்)
இழை - நூல் (மெல்லிய இழையில் ஆடை செய்தனர்)
கலை - கவின் கலைகள் (தமிழர் கலைகளில் வல்லவர்)
களை - நீக்கு, பயிர்க்களை (வயலில் களைப் பறிக்க வேண்டும்)
கழை - மூங்கில் (கழைக்கூத்தாடிகள் வித்தை காட்டுவார்கள்)
தலை - ஓர் உறுப்பு (தலையே சிறப்பான உறுப்பு)
தளை - விலங்கு (இந்தியா அடிமைத்தளையில் இன்னல் உற்றது)
தழை - தழைத்தல் (பயிர்கள் தழைத்தன)
வலி - வலிமை, வலித்தல் (யானைக்கு தும்பிக்கையில் வலிமை)
வளி - காற்று (வளிமண்டலம் பல அடுக்குகளை கொண்டது)
வழி - பாதை (துறையூருக்கு போகும் வழி எது?)

பாடம்-4

வெல்லம் - இனிப்பு (வெல்லம் இனிப்பாக இருக்கும்)
வெள்ளம் - அதிகமான நீர் (மழைபெய்தால் வெள்ளம் பெருகும்)
பாலை - நீரற்ற நிலம் ஐவகை நிலங்களுள் ஒன்று பாலை
பாளை - தென்னம்பாளை (தென்னம்பாளையில் பூக்கள் காணப்படும்)
காலை - பொழுது (காலையில் எழுந்து படி)
காளை - மாடு (காளைமாடு வண்டி இழுக்கும்)

2. ர-ற ஒலி வேறுபாடு

அரி - திருமால், சிங்கம், காய்களை அரி (அரி காக்கும் கடவுள்)
அறி - அறிந்து கொள் (பாடங்களைப் பொருள் அறிந்து படி)
அலரி - அலரிப்பூ (மக்கள் அலரிப்பூவால் வழிபாடு செய்வர்)
அலறி - அழுது (மீனா அலறினாள்)
இரத்தல் - பிச்சையெடுத்தல் (ஈ என இரத்தல் இழிவாகும்)
இறத்தல் - சாதல் (இறத்தல் என்பது எளிது)
உரவு - வலிமை (உடல் உரவினும் மனவலிமை மேல்)
உறவு - சுற்றம் (உறவைப் பேணுதல் வேண்டும்)
உரை - சொல் (நல்லுரை கேள்)
உறை - தலையணை உறை (புதிய தலையணை உறை வாங்கினேன்)
எரி - தீ (அடுப்பை எரி)
எறி - வீசு (தூக்கி எறி)
கரி - யானை (கரிப்படையில் வலிமை அதிகம்) (கரிக்கு வலிமை அதிகம்)
கறி - காய்கறி, மிளகு (காய்கறி வாங்கி வந்தான்)
குரங்கு - வானரம் (குரங்கின் வேந்தன் சுக்ரீவன்)
குறங்கு - தொடை (குறங்கை பிளப்பேன்)
கூரை - வீட்டுக்கூரை (கூரை வேய்ந்த வீடு குளிர்ச்சி)
கூறை - துணி (கூரைப்புடவை வாங்கி வந்தேன்)
சீரிய - சிறந்த (கண்ணன் சீரிய பண்பாளன்)

சீறிய - சினந்த (இராவணன் சீறினான்) (பாம்பு சீறியது)
பரவை - கடல் (பரவையில் மீன்கள் கூட்டம் வாழும்)
பறவை - பறப்பனவாகிய உயிரினம் (பறவை வானத்தில் பறந்தது)
மரை - மான், தாமரை (காட்டில் மரை துள்ளியது)
மறை - வேதம் (திருக்குறள் தமிழ்மறை ஆகும்)

**பாடம்-6**

அணல் - தாடி (வெள்ளாடுகளுக்கு அணல் உண்டு)
அனல் - நெருப்பு (உலைக்கலத்தில அனல் மூண்டது)
ஆணி - இரும்பால் ஆனது ஆணி (சுவரில் ஆணி அடித்தேன்)
ஆனி - தமிழ்மாதங்களுள் ஒன்று ஆனி (ஆனி மாதம் திருமணம்)
ஊண் - உணவு (ஊண் மிக விரும்பேல்)
ஊன் - மாமிசம் (ஊன் உண்பது பாவம்)
கணம் - கூட்டம் (திரையரங்கில் கணங்கள் அதிகம்)
கனம் - பாரம் (கனம் அதிகமானதால் வண்டி நகரவில்லை)
பேண் - காப்பாற்று (முதியோரைப் பேண்)
பேன் - தலையில் வாழும் பேன்
மணம் - நறுமணம் (சந்தனம் அரைக்க அரைக்க மணம்)
மனம் - உள்ளம் (மனம் தூய்மையாக இருக்க வேண்டும்)
மணை - உட்காரும் பலகை (திருமணமக்கள் மணையில் உட்கார்ந்துள்ளனர்)

மனை - வீடு (என் மனை துறையூரில் உள்ளது)
மாண் - பெருமை (கம்பர் கல்வியில் மாண்புற்றார்)
மான் - புள்ளிமான் (மான் துள்ளி ஓடியது)
முந்நாள் - மூன்று நாள் (முந்நாள்திருவிழா நடந்தது)
முன்னாள் - முந்தைய நாள் (முன்னாள் திருவிழா முடிந்தது)
தேநீர் - தேயிலை நீர் (காலையில் தேநீர் அருந்தினேன்)
தேனீர் - தேன்போலும் இனிய நீர்
தினை - (தாவரவகை) தானிய வகை (தினை மாவு கஞ்சி குடித்தேன்)
திணை - ஒழுக்கம், நிலம் (குறிஞ்சித் திணை மலையும் மலைச் சார்ந்த பகுதியாகும்)
கனை - குதிரை எழுப்பும் ஒலி (குதிரை கனைக்கிறது)
கணை - அம்பு (வில்லும் கணையும் பழங்காலப் போர்க்கருவிகள்)

மரம் - தாவர வகை (நமது தேசியமரம் ஆலமரம்)
மறம் - வீரம் (கர்ணன் மறம் நிறைந்தவன்)
மறம் - மனிதர்க்கு உரியது **மறம்**(வீரம்) அன்றேல் அவர் **மரம்**
ஊன்-ஊண் - **ஊண்** உயிரிகளின் உணவு, **ஊன்** உயிரிகளின் உடல் பகுதி
கல்-கள் - மலையில் இருப்பது **கல்**, பனையில் இருப்பது **கள்**
பரவை-பறவை - பரந்து இருப்பதால் கடலைப் **பரவை** என்றனர். பறந்து வருவதால் புள் இனத்தைப் **பறவை** என்றனர்.
இரத்தல் - யாசித்தல் இறத்தல் - உயிர்விடுதல்
இறத்தல் - பண்டைய புலவர் **இரத்தலினும் இறத்தல்** (உயிர்விடுதல்) நன்றென வாழ்ந்தனர்.
பரி - குதிரை
பறி - பறித்தல்
அக்கால கள்வர்கள் **பரி**(குதிரையில்) வந்து (வழிப்பறி) **பறி**த்தல் செய்தனர்.
கரி - மரக்கரி
கறி - இறைச்சி
**கரி** அடுப்பில் **கறி** சமைப்போரும் உண்டு
அரி - திருமால்
அறி - அறிந்துகொள்
காக்கும் கடவுள் **அரி** (திருமால்) என்பதை நன்றாய் **அறி** (நினை)
பனி - பனிப்பொழிவு
பணி - வேலை
**பனி**யில் நனைந்து (பனிக்காலம்) **பணி** செய்தால் பிணி வரும் (வேலை)
களி - மகிழ்ச்சி

கலி - துன்பம்
நளனைப் பிடித்திருந்த **கலி** நீங்கியது. (சனி) நளனும் **களி**ப்படைந்தான். (மகிழ்வு)
விலை-விளை - **விளை**ச்சல் மிகுந்ததால் **விலை** குறைந்தது.
ஒலி - சத்தம்
ஒளி - வெளிச்சம்
செவியால் கேட்கும் **ஒலி**யும் நன்று. கண்ணால் பார்க்கும் **ஒளி**யும் நன்று
விளி - அழை
விழி - விழிப்பு
**விளி**ப்பு ஒலி கேட்டேன் (அழைப்பு) **விழி**களைத் திறந்தேன் (கண் விழி)
ஒரு - ஒன்று
ஒறு - தண்டனை
**ஒரு** ரூபாய் **ஒறுப்பு**க் கட்டணம் (தண்டனை)
மனம் - உள்ளம்
மணம் - வாசனை
மலரின் **மணத்தில் மனத்தைப்** பறிகொடுத்தேன்.

## 7. கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல்

**பாடம்-5**

1. சாயந்தரம் நேரத்தோடு வராட்டி அம்மா திட்டும்.
   **விடை: மாலையில் விரைவாக வீட்டிற்கு வரவில்லை எனில் அம்மா திட்டுவார்கள்.**
2. சித்த நாழி உக்காரு, இந்தா வந்திடறேன்.
   **விடை: சற்று நேரம் அமருங்கள் இதோ வந்து விடுகிறேன்.**
3. அம்மாசிச் சோறு ஆசைப்பட்டா கெடைக்காது.
   **விடை: அமாவாசை சோறு ஆசைப்பட்டால் கிடைக்காது.**
4. வெளையாட்டிலேயே கண்ணா இருக்காதே.
   **விடை: விளையாட்டில் கண்ணாக இருக்காதே**
5. அம்மாப் பொண்ணுக்குக் கண்ணாலம். அவரவர் வூட்டுலெ சாப்பாடு.
   **விடை: அம்மாள் பெண்ணிற்குத் திருமணம்; அவரவர் வீட்டிலே சாப்பாடு.**

**பாடம்-8**

1. தலைக்கு சீக்கா தேச்சு முழுவனா ஒடம்புக்கு குளிர்ச்சி
   **விடை : தலைக்கு சீகைக்காய் தேய்த்துக் குளித்தால் உடம்பிற்கு குளிர்ச்சி.**
2. நெல்லுச்சோறு வவுத்துக்கு நோவு தராது.
   **விடை : அரிசி உணவு வயிற்றுக்கு நோய் தராது.**
3. பொண்ணு கண்ணாலத்துக்கு சீர் செனத்தி சேத்தி வச்சிருக்கியா?
   **விடை : பெண்ணின் திருமணத்திற்கு சீர்வரிசை பொருள்கள் சேர்த்து வைத்திருக்கிறாயா?**
4. விடிகால எந்திருச்சி வெள்ளாம பாக்க போனான்.
   **விடை : விடியற்காலையில் எழுந்து விவசாயம் பார்க்கப் போனான்.**
5. மானம் பாத்த பூமியில மழ பெஞ்சு பல வருசமாச்சு.
   **விடை : வானம் பார்த்த பூமியில் மழை பொழிந்து பல வருடங்களாயிற்று.**
6. காத்தாடி வுட்ட மாஞ்சா கவுறு கழுத்த அறுத்ததுப் புடிச்சு.
   **விடை : பட்டம் விட்ட மாஞ்சா கயிறு கழுத்தை அறுத்தது.**

## 8. வாக்கியப் பிழையை நீக்கி எழுதுதல்

**கூடுதல் வினாக்கள்:**

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் பணிந்தான்.
   **விடை:** கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவரை மன்னரும் **பணிந்தனர்**
2. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
   **விடை:** பெண்கள் பெற வேண்டியவை பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
3. இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தது.**
   **விடை:** இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தன.**
4. வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தது.**
   **விடை:** வயது வந்தோர்க்கு வாக்குரிமை, பெண்களுக்கு வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தன.**

5. இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் **போன்றது.**
   **விடை:** இலக்கியக் கூறுகள் என்பவை மருந்தின் மேலிட்ட இனிப்புப் **போன்றவை.**
6. புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினார்.**
   **விடை:** புலவர்கள் பொங்கற்புதுநாளின் மாண்பினை உணர்ந்து **கொண்டாடினார்கள்.**
7. மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி **போன்றது.**
   **விடை:** மேடைப்பேச்சுக்குக் கருத்துகளே உயிர்நாடி **போன்றவை.**
8. இன்று பேருந்துகள் **ஓடாது.**
   **விடை:** இன்று பேருந்துகள் **ஓடா.**
9. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும், ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் **இருக்கின்றது.**
   **விடை:** நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும், ஆங்காங்கு ஒளிபரப்பும் மின் விளக்குகள் போல் **இருக்கின்றன.**
10. ஓர் அணில் மரத்தில் **ஏறின.**
    **விடை:** ஓர் அணில் மரத்தில் **ஏறியது.**
11. நான் வாங்கிய நூல் இது **அல்ல.**
    **விடை:** நான் வாங்கிய நூல் இது **அன்று.**
12. காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் **கிடந்தது.**
    **விடை:** காவிரிப்பூம்பட்டினத்தில் பொருள்கள் மண்டிக் **கிடந்தன**.
13. தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தன.**
    **விடை:** தமிழர்கள் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது.**
14. ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தார்கள்.**
    **விடை:** ஓர் இளம்பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**
15. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதா.**
    **விடை:** மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**
16. பெண்கள் எல்லாத்துறைகளிலும் **பணிபுரிகின்றாள்.**
    **விடை:** பெண்கள் எல்லாத்துறைகளிலும் **பணிபுரிகின்றார்கள்.**
17. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளது.**
    **விடை:** தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளன.**
18. அவன் கவிஞன் அல்ல.
    **விடை:** அவன் கவிஞன் **அல்லன்.**

## 9. விரிவாக்கம் எழுதுதல்

**புத்தக வினாக்கள்:**

1. த.நா.மி.வா – தமிழ்நாடு மின்சார வாரியம்
2. த.நா.கு.வ.வா – தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
3. அ/மி சௌந்திரவல்லித்தாயார் – அருள்மிகு சௌந்திரவல்லித்தாயார்
4. அ.நி.கு.எண் (பின்கோடு) – அஞ்சல் நிலைய குறியீட்டு எண்
5. தொ.பே.எண் – தொலைபேசி எண்
6. ஆ.கா.க (எல்.ஐ.சி) – ஆயுள் காப்பீட்டுக் கழகம்
7. இ.ஆ.ப – இந்திய ஆட்சிப்பணி
8. எஸ்.எஸ்.ஏ (சர்வ சிக்ஷா அபியான்) – அனைவருக்கும் கல்வி இயக்கம்
9. இ.எஸ்.ஏ – தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம்
10. டயட் (DIET) – மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம்
11. டிபி.இபி (DPEP) – மாவட்டத் தொடக்கக் கல்வித்திட்டம்
12. பெ.ஆ.கழகம் – பெற்றோர் ஆசிரியர் கழகம்
13. டிட்டி.ஈ.ஆர்ட்டி (DTERT) – ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்

## 10. நிறுத்தற்குறியிட்டு எழுதுதல்

பாடம் - 5

1. மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ உன்னையறிந்தோ தமிழை ஓதினேன் என்று சினந்தான் கம்பன்
   **விடை:** "மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ? உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்?" என்று சினந்தான் கம்பன்.

2. நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும் வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே பெண்மை அரசு
   **விடை:** நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா, ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா, வேற்படையும் வாளுமே கண்ணா, வதன மதிக்குடைக்கீழ் ஆளுமே பெண்மை அரசு.

3. புனிதவதியார் தாம் பெற்ற பேய்வடிவத்தில் பேயார் என்றும் இறைவன் அம்மையே என்றழைத்தால் அம்மையார் என்றும் தாம் பிறந்த காரைக்காலுக்கும் பெருமை சேர்த்ததால் காரைக்காலம்மையார் என்றும் அழைக்கப்படுகின்றார்
   **விடை:** புனிதவதியார் தாம் பெற்ற பேய்வடிவத்தில் "பேயார்" என்றும், இறைவன் 'அம்மையே!' என்றழைத்தால் "அம்மையார்" என்றும், தாம் பிறந்த காரைக்காலுக்கும் பெருமை சேர்த்ததால் "காரைக்காலம்மையார்" என்றும் அழைக்கப்படுகின்றார்.

## 11. ஏற்ற வினா அமைத்தல்

**புத்தக வினாக்கள்:**

1. பாரியின் ஆருயிர் நண்பர் கபிலர்.
   **பாரியின் ஆருயிர் நண்பர் யார்?**
2. கல்வியானது வெள்ளத்தால் அழியாது. வெந்தழலால் வேகாது.
   **வெள்ளத்தால் அழியாததும், வெந்தழலால் வேகாததும் ஆன செல்வம் எது?**
3. கல்வியில் சிறந்தவர் கம்பர்.
   **கல்வியில் சிறந்தவர் யார்?**
4. சுவை என்பது மெய்ப்பாடு என்றும் கூறப்படும்.
   **சுவை என்பதை வேறு எவ்வாறு கூறலாம்?**
5. பகைவர்மேற் செய்யும் வன்கண்மையை பேராண்மை என்று சொல்வர்.
   **பேராண்மை என்றால் என்ன?**
6. முற்றும் துறந்த பட்டினத்தடிகள் என்று தமிழகம் பெரியாரைப் போற்றிப் புகழும்.
   **தமிழ்நாட்டின் முற்றும் துறந்த பட்டினத்தடிகள் என்று தமிழகம் யாரைப் புகழும்? (அல்லது)**
   **பட்டினத்தடிகளைத் தமிழகம் எவ்வாறு போற்றிப் புகழும்?**
7. இந்து வேதங்களுள் மிகவும் பழமையானது ரிக் வேதம்
   **விடை: இந்து வேதங்களுள் மிகவும் பழமையான வேதம் எது?**
8. திருமூலர் எடுத்துக்காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் நான்கு.
   **விடை :திருமூலர் எடுத்துக்காட்டும் சமய வழிப்பட்ட கடமைகள் எத்தனை?**

**கூடுதல் வினாக்கள்:**

1. கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் வால்ட்டிஸ்னி என்பவர் ஆவார்.
   **கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் யார்?**
   **வால்ட்டிஸ்னி எந்தப்படங்கள் அமைக்கத் தொடங்கினார்?**
2. திரைப்படம் எடுப்பதனை விடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
   **திரைப்படம் எடுப்பதனை விடக் கடினமான பணி எது?**
3. தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் திரு.வி.க.
   **தமிழ்த்தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர் யார்? (அ) திரு.வி.க எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறார்?**
4. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
   **பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் யார்?**
   **பெண்கள் எதைப்படைக்கவேண்டும் என்று பெரியார் விரும்பினார்?**
5. இலெமூரியாவை மனித நாகரிகத்தொட்டில் என்பர்.
   **மனித நாகரிகத்தொட்டில் எது?**
   **இலெமூரியாவின் வேறு பெயர் யாது?**
6. உடலில் வாதம், பித்தம், சீதம் ஆகிய மூன்றும் சமநிலையில் இருக்க வேண்டும்.
   **உடலில் எவை சமநிலையில் இருக்க வேண்டும்?**
   **வாதம், பித்தம், சீதம் மூன்றும் எவ்வாறு இருக்க வேண்டும்?**

**7.** காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
**பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதியவர் யார்?**
**காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் எது என்று கருதினார்?**

**8.** வடலூரில் சத்திய தருமசாலை உள்ளது.
**சத்திய தரும சாலை எங்கு உள்ளது?.**
**வடலூரில் எத்தகைய தருமசாலை உள்ளது?**

**9.** தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன.
**எங்கு பயில்வோருக்கு நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன?**

## 12. இலக்கிய சுவை கண்டறிந்து எழுதுதல்

**இலக்கிய சுவைகள்:** 9

| | | |
|---|---|---|
| 1. நகை | 2. அவலம் | 3. இழிப்பு |
| 4. வியப்பு | 5. அச்சம் | 6. வீரம் |
| 7. வெகுளி | 8. உவகை | 9. சமனிலை |

1. இந்தக்கோலத்தில் உன்னைக் கண்ட என் கண்களைப் பறித்தெறியாத பாவியேன் நான்.
**விடை: அவலச் சுவை**
2. தூங்கும் புலியை இடறிய குருடன் போல மீளுதல் அரிது என்றான் நலங்கிள்ளி
**விடை: வீரச்சுவை**
3. பித்தன் ஒருவன் அழுதலும் தொழுதலும் விழுதலும் எழுதலும் செய்து வருகிறான்
**விடை: நகைச்சுவை**
4. திருநீலகண்டர் மனையாள் வைத்த ஆணைக்கிணங்க ஐம்பொறியுகளையும் வென்று இன்பம் துறந்தார்.
**விடை: சமனிலை**
5. பெற்ற பிள்ளையை வாளாலறிந்து இறைவனுக்கு இன்னமுதூட்ட வல்லேனோ?
**விடை: மருட்கை**
6. முதலாளி இலக்கியமும் முடிமக்கள் இலக்கியமும் அன்றிக் குடிமக்கள் இலக்கியம் என ஏதேனும் உண்டோ?
**விடை: வியப்பு**
7. பழந்தமிழன் வாய்ப்பந்தல் போடுகிறானா?
**விடை: இழிப்பு**
8. இன்று போய் நாளை வா என்று இராமன் கூறினான்.
**விடை : வீரம்**
9. குகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத் தேனையும் இராமனுக்கு கொண்டு சென்றான்.
**விடை: உவகை**
10. உன்னைச் சடைமுடியும் மரவுரியும் தரித்து கானகப்புல்லில் அமர்ந்திருக்கக் கண்டேனே!
**விடை: அவலம்**
11. தன்னுயிா் புகழ்க்கு விற்ற சடாயு **– விடை : வீரம்**
12. யானையைக் கொல்லாமலே யானைக் காலிலிருந்து முதியவனைக் காப்பாற்றுகின்றான் கோவலன்.
**விடை: வீரம்**
13. “மன்னவனும் நீயோ? வளநாடும் உனதோ? உன்னையறிந்தோ தமிழை ஓதினேன்?” என்று சினந்தான் கம்பன்.
**விடை: இழிப்பு**

## 13. தொகைச்சொல்லை விரித்து எழுதுதல்

| | | |
|---|---|---|
| 1. | இருவினை | - நல்வினை, தீவினை (தன்வினை, பிறவினை) |
| 2. | இருதிணை | - உயர்திணை, அ்்றிணை (அகத்திணை, புறத்திணை) |
| 3. | முத்தமிழ் | - இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் |
| 4. | முப்பால் | - அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் |
| 5. | மூவிடம் | - தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 6. | மூவேந்தர் | - சேரர், சோழர், பாண்டியர் |
| 7. | நாற்றிசை | - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| 8. | நானிலம் | - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |
| 9. | ஐந்திணை | - குறிஞ்சித்திணை, முல்லைத் திணை, மருதத்திணை,நெய்தல் திணை, பாலைத்திணை |
| 9. | ஐம்பால் | - ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| 10. | ஐம்புலன் | - தொடு உணர்வு, உண்ணல், உயிர்த்தல், காணல், கேட்டல் |
| 11. | ஐம்பொறி | - மெய், வாய், கண், மூக்கு, செவி |

**கூடுதல் வினாக்கள்**

12. ஈரெச்சம் - பெயரெச்சம், வினையெச்சம்
13. இருபால் - ஆண்பால், பெண்பால்
14. இருமை - இம்மை, மறுமை
15. மூவுலகம் - விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம்
16. முப்படை - தரைப்படை, கப்பற்படை, விமானப்படை
17. முந்நீர் - ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர்
18. நாற்படை - காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை
19. நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு
20. முக்கனி - மா, பலா, வாழை
21. முக்காலம் - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
22. நாற்குணம் - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
23. நான்மறை - ரிக், யஜுர், சாமம், அதர்வணம்
24. ஐந்திலக்கணம் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
25. அறுசுவை - இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு
26. எண்டிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு
27. ஐம்பூதங்கள் - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்
28. ஏழு பருவம் - பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்

**தயாரிப்பு**
**திரு. த. செல்வேந்திரன் முதுகலை பட்டதாரி ஆசிரியர்**
**அரசு மேல்நிலைப்பள்ளி, மூவானூர், திருச்சி**

**தயாரிப்பில் உதவி**
**திருமதி. நா. தேவிகா சுரேஷ் MA., B.Ed., P.G.D.C.A.,**
**வெற்றிக்கு வழி ஆசிரியர் குழு**